**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 95/2025.**
**வழக்கு சாட்சி – அ.சா. 1 (பட்டியல் சாட்சி – 1).**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. ஜெயக்குமார். | ஜாதி | |
| தந்தை பெயர் | அண்ணாத்துரை | தொழில் | ஜெராக்ஸ் கடை வைத்துள்ளேன். |
| கிராமம் | வடபுதுப்பட்டி. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 44/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.07.2026.

**(எதிரி ஆஜரில்லை. அவருக்காக பிரிவு 355 B.N.S.S. –ன் கீழ் மனுத் தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**அரசுத் தரப்பு முதல் விசாரணை:–**

(1) நான் தற்போது, வடபுதுப்பட்டியில் குடியிருந்துகொண்டு, ஜெராக்ஸ் கடை வைத்துள்ளேன். எதிரி செல்வேந்திரனைத் தெரியும். நாங்கள் இருவரும் நாம் தமிழர் கட்சியில் இருந்தோம். தற்போது அவர் கட்சியிலிருந்து நீக்கிவிட்டார்கள். கடந்த 27.05.2024 ஆம் தேதியன்று, எங்கள் கட்சியிலிருந்து எங்களது கட்சித் தலைவரான சீமான் மற்றும் மாவட்டப் பொறுப்பாளர்களைப் பற்றியும் சீமானை, இந்தப் புண்ட மகனுக்கு இதே வேலையாப் போச்சு என்றும், மாவட்டத்தின் பொறுப்பாளர்கள் அனைவரும் மாமா வேலை பார்க்கிறாங்க என்று அருவறுக்கத் தக்கவகையில் தகாத வார்த்தைகளால் கேவலப்படுத்தும் வகையில் செல்வேந்திரனின் முகநூலான selvapackiyaraj என்ற Account மூலமாக பதிவிட்டிருந்தார். பின்னர், கடந்த 12.06.2024 ஆம் தேதியன்று அவர்மீது நடவடிக்கை எடுக்க தேனி மாவட்டக் குற்றப் பிரிவில் மேற்படி நபரின் முகநூலில் இருந்த அவதூறான வாசகங்களை காட்டும் Screenshot–களுடன் புகார் கொடுத்தேன்.

(2) சம்பவம் குறித்து நடவடிக்கை நான் புகார் கொடுத்தேன். தற்போது, இந்நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்ததுதான்.

அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்தப் புகார் **அ.சா.ஆ.1** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. எதிரி அவரது முகநூலில் பதிவு செய்திருந்த அவதூறான வாக்கியங்களைக் காட்டும் பதிவுகள் என்னிடம் காட்டப்படுவதுதான். அது அ.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது (எண்ணம் – 4 தாட்களைக் கொண்டது). சம்பவம் குறித்துப் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சியை, குறுக்கு விசாரணை செய்யப் போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும், சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞரால் காலஅவகாசம் கோரப்பட்டது. எனவே, குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது).

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.07.20 06:03:26 +0530

**நீதித்துறை நடுவர்,**
**தேனி.**